**நாவலப்பிடிய நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாவலப்பிடிய நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாவலப்பிடிய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகை தரபபினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கலாக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 620,220 ஆன 16 நானாவித கடன் கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 71,227 ஆன கடன் கொடுத்தோர் மீதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததாகவும் எஞ்சிய கடன் கொடுத்தோர் மீதிகளைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன் கொடுத்தோர் மீதிகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2 நிர்மாண கடன் கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி ரூபா 769,304 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | நிர்மாண கடன் கொடுத்தோர் மீதிகள் சரியாக இனங்காணப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் போது ரூபா 4,937,837 செலவிட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த 04 நிர்மாணங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பெறுமதி மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மூலதனச் செலவினத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செலவினம் மூலதனமாக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 சொத்து விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 31,010,837 ஆக இருந்த போதும் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 30,519,554 ஆக இருந்தமையால் ரூபா 491,283 ஆன வித்தியாசம் காணப்பட்டது | ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

### 1.7. இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டசட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் 157 (6) (எ) பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பர பதாதைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 991,063 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறிவித்தல் பதாதைக் கட்டணங்களை அறவிடுவதற்கு கடிதங்கள் அனுப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டியதுடன் விளம்பர பதாதைகளை கணிப்பீட்டு செய்யப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை யினால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | செயல்நிமிர்த்த கட்டுநிதி ஒன்று வழங்கப்பட்டதன் பின்னர் குறித்த செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டவுடன் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 17 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 383,157 ஆன செயல் நிமிர்த்த கட்டுநிதியை தீர்வு செய்யும் போது 03 நாட்கள் முதல் 138 நாட்களுக்கு இடைப்பட்ட தாமதமொன்று ஏற்பட்டிருந்தது. | தற்போது தாமதமின்றி கட்டளைகள் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 35,422,917 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,314,465 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பொதுக் கணக்கீட்டுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் இணக்க கூற்றின் பிரகாரம் வங்கிப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள வேறுபாடாக 2019 ஜனவரி 19 ஆம் திகதி வைப்புச் செய்யப்பட்டிருந்த 736,000 தொகை இனங்காணப்பட்டு தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபையின் சிறப்புச் சந்தை தொகைக்குரிய வியாபாரி ஒருவரால் நேரடியாக நகர சபைக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்ட பணமாக இருந்ததாகவும் அவ்விபரங்களை சபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததால் வங்கி இணக்கக் கூற்றில் வேறாகக் காண்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வைப்புகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து சீராக்கம் செய்ய வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி குத்தகைக்கு வழங்குவதற்குரிய பெற வேண்டிய நிலுவை ரூபா 779,002 ஆக இருந்ததுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 538,522 ஆக இருந்தது. | குறித்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கொடுப்பனவு செய்யா தோருக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஆ) | நாவலப்பிட்டி மீச் சந்தைக் கடைத் தொகுதியின் 176 கடைகளுக்காக 2018 ஜனவரி 08 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடாமை காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு ரூபா 73,193,570 ஆன வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடப்பட்ட புதிய கடை வாடகை தொகை கொடுப்பனவுக்கு இணங்காமையால் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் 2018 ஆம் ஆண்டிலிருந்து கடை வாடகை கொடுப்பனவு மேற்கொள்ளதால்இந்த நிலுவைத் தொகை காணப்படுவதாகவும் பகுதி பகுதியாகக் கொடுப்பனவு மேற்கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை கடை அறைகள் மதிப்பீடு செய்து புதிய வாடகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 896,074 ஆக இருந்ததுடன் ஓராண்டு முதல் 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் கடந்த ரூபா 68,100 மற்றும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகவுள்ள ரூபா 765,174 காணப்பட்டது. | நீர் வழங்கல் சபைக்கு கையளிக்கப்பட்ட நீர் முன்மொழிவுத் திட்டத்தின் நிலுவையைப் பதிவழிப்பதற்கும் எஞ்சிய நீர் முன்மொழிவு முறைமைக்குரிய பற்றாக்குறையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய மோட்டார் வாகன நிறுத்தி வைத்தல் கட்டண நிலுவை ரூபா 5,251,532 ஆக இருந்ததுடன் அதில் 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்டிருந்ததுடன் காலப் பகுதிக்குரிய பற்றாக்குறை ரூபா 3,515,457 ஆக இருந்ததுடன் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 902,944 ஆக இருந்தது. | இத்தொகையில் ஒரு பகுதி 2020 ஜுலை 27 ஆம் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததாகவும் எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு மோட்டார் வாகன உரிமையாளர்களுக்கு இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் ஜனவரி 1 இல் உள்ளவாறு பெற வேண்டிய நிலுவை மலசலகூட கட்டணங்கள் ரூபா 1,269,174 ஆக இருந்ததுடன் அந்நிலுவையில் ஆண்டின் அறவீடுகள் ரூபா 49,010 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 1,225,164 ஆக இருந்தது. | 2022 ஜுன் 30 இல் உள்ளவாறு ஒரு பகுதி தீர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் மாதம் முதல் 2021 நவம்பர் மாதம் வரையான காலப்பகுயினுள் வீதவரி வருமானத்தை சேகரித்த உத்தியோகத்தரால் சரியான வீதவரி வழங்கல் கோவையொன்றிற்குப் புறம்பாக | ஆரம்ப புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வருமான அறவீடு தொடர்பாகக் காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டைப் பலப்படுத்தல் வேண்டும்.<br><br>பொறுப்பான உத்தியோகத்தர்கள் |

| | | |
|---|---|---|
| வேறொரு கோவையொன்று (folder) மூலம் வீதவரி பற்றுச்சீட்டு வழங்கி அவ்வருமானத்தை சபைக்கு செலுத்தப்படாமல் ரூபா 1,527,688 ஆன வீதவரி வருமானம் விடயத்திற்குப் பொறுப்பு உத்தியோகத்தரால் முறையற்ற விதத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | | தொடர்பாக தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் விளையாட்டு அரங்கினை விளையாட்டு நடவடிக்கைகளுக்காக வழங்குவதன் மூலம் அறவிடக் கூடியதாக இருந்த ரூபா 1,695,180 ஆன வருமானம் அறவிடப்படாது இருந்ததுடன் அதில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையாக இருந்த ரூபா 1,429,080 ஆன மீதியொன்று காணப்பட்டது. | விடயப் பொறுப்பு உத்தியோகத்தரின் கவனயீனத்தின் காரணமாக கடன்பட்டோராக காண்பிக்கப்படாமல் இருந்ததாகவும் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து மொத்தத்துடன் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த வருமானம் மற்றும் நிலுவை மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாடுடைய சொத்துக்கள் பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ரூபா 1,665,000 பெறுமதியான 02 மோட்டார் வாகனங்கள் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | 02 வாகனங்கள் செயலற்று உள்ளன. திருத்த வேலைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | திருத்த வேலைகளை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நாவலபிட்டி சிறப்புச் சந்தைத் தொகுதியின் நிர்மாணத்திற்காக சபையால் 2008 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 252,191,942 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் 2021 திசெம்பர் 15 கணக்காய்வுத் திகதி | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நகரசபைக்கு கையளிக்குமாறு வேண்டுகோள் விடுத்த போதும் இதுவரை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முன்னர் காணியின் உரித்து கையளிக்கப்பட வேண்டியதுடன் இக்காணி கையேற்பிற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரையிலும் சிறப்புச் சந்தைத் தொகுதி நிர்மாணிக்கப்பட்ட இடம் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 2016 ஆம் ஆண்டு முதல் 10 சந்தர்ப்பங்களில் ரூபா 21, 950,873 செலவில் எம்புல்பிடிய சுற்றாடல் பாதுகாப்பு நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அக்கட்டிடத்துக்குரிய காணியை முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி செயற்திட்டங்கள் அல்லது நிர்மாண செயற் திட்டங்களுக்காக நிதியத்தை ஈடுபடுத்துவதற்கு முன்னர் காணி கையேற்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில் லை. |

3.5 **மனித வள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) **மனித வள முகாமைத்துவம்**<br><br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,488,572 ஆன ஊழியர் கடன் மீதியொன்று காணப்பட்டதுடன் அம்மீதியில் சேவையை விட்டுச் சென்றிருந்த 17 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 04 ஆண்டுகள் முதல் 28 ஆண்டுகள் வரையிலான காலம் கடந்த ரூபா 427,725 ஆன கடன் மீதிகளும் ஓய்வு பெற்று 10 மாதங்கள் முதல் 33 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கடந்த ரூபா 339,696 ஆன 14 கடன் மீதிகளும் இருந்தன. | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |